# CENTRE FOR MONITORING ELECTION VIOLENCE

# මැතිවරණ ප්‍රචණ්ඩත්‍රියා නිරීක්ෂණ මධ්‍යස්ථානය

# தேர்தல் வன்முறைகளைக் கண்காணிப்பதற்கான நிலையம்

24/2, 28th Lane, Off Flower Road, Colombo 07
**Tel:** 011 7920950, 0117920951**Fax:** 011 7920949
**E-mail:** cmev@cpalanka.org **Website:** www.cpalanka.org


**பாராளுமன்ற பொதுத் தேர்தல் - 2010**

**ஊடக அறிக்கை 01**

**19 மார்ச் 2010**

**10.00 மணி**

***கொழும்பு, இலங்கை,*** தேர்தல் வன்முறைக் கண்காணிப்பதற்கான நிலையம்(CMEV)பொதுச் சொத்துக்கள் பிரச்சார நடவடிக்கைகளுக்காக துஷ்பிரயோம் செய்யப்படுவது தொடர்பிலும் அதிகரித்த துப்பாக்கிப் பிரயோகம் தொடர்பிலும் ஆழ்ந்த கரிசனை கொண்டுள்ளது.

**வன்முறைகளின் தன்மை**
வேட்பு மனுத் தாக்கல் முடிவடைந்த தினமான பெப்ரவரி 26 ஆம் திகதியிலிருந்து 18 மார்ச் 2010 வரை தேர்தல் வன்முறைகளைக் கண்காணிப்பதற்கான நிலையம்(CMEV) 75(65%) பாரிய வன்முறைச் சம்பவங்கள் உள்ளடங்கலாக மொத்தமாக 115 தேர்தல் தொடர்பான வன்முறைச் சம்பவங்களை உறுதிப்படுத்தியுள்ளது. உறுதிப்படுத்தபப்பட்டுள்ள பாரிய வன்முறைச் சம்பவங்கள் 75 இல் 25(33%) சம்பவங்கள் தேர்தல் நடவடிக்கைகளுக்காக பொதுச் சொத்துக்கள் துஷ்பிரயோகப் படுத்தல் தொடர்பானதாகும். துப்பாக்கிப் பிரயோகம் பயன்படுத்தப்பட்ட சம்பவங்கள் 18 ஆக உயர்ந்துள்ளன. அது மொத்த பாரிய வன்முறைச் சம்பவங்களின் 25% ஆகும்.

உறுதிப்படுத்தப்பட்ட 75 பாரிய சம்பவங்களுள் 06 காயப்படுத்தல் சம்பவங்கள், 03 பாரிய காயப்படுத்தல் சம்பவங்கள், 22 தாக்குதல் சம்பவங்கள், 14 கொலை அச்சுறுத்தல் சம்பவங்கள், 25 பொதுச் சொத்துக்கள் துஷ்பிரயோகம் செய்யப்படுதல் சம்பவங்கள் மற்றும் 05 தீவைப்பு சம்பவங்களும் உள்ளடங்குகின்றன.

**பொதுச் சொத்துக்கள் துஷ்பிரயோகம்**: தேர்தல் வன்முறைகளைக் கண்காணிப்பதற்கான நிலையத்திற்கு(CMEV) பொதுச் சொத்துக்கள் துஷ்பிரயோகம் தொடர்பாக குருநாகல் மாவட்டத்திலிருந்து 6 சம்பவங்கள் கிடைக்கப்பெற்றுள்ளன; இவற்றுள் 03 சம்பவங்கள் தேச நிர்மாண அமைச்சரும் ஐ.ம.சு.மு வேட்பாளருமான சாலிந்த திசாநாயக்க(வேட்பாளர் இல 17) மற்றும் அவரின் ஆதரவாளர்கள் குறிப்பிட்ட அமைச்சுக்கு சொந்தமான 03 டபள் கெப் வண்டிகள்(252-60-10,WP HI 2766 மற்றும் WP PB 2271) மற்றும் சீ.டி.எம்.ஏ தொலைபேசி ஒன்றையும் 011-4945974) தேர்தல் நடவடிக்கைகளுக்காக பயன் படுத்துவதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளனர்.

தேர்தல் வன்முறைகளைக் கண்காணிப்பதற்கான நிலையம்(CMEV) பல தடவைகள் சாலிந்த திசாநாயக்கவை தொடர்பு கொள்ள முயற்சித்த போதும் சாத்தியப்படவில்லை.

கல்கமுவவில் இராணுவ வீரர்களின் நலனுக்காக நிர்மாணிக்கப்பட்ட கட்டிடமொன்று ஐ.ம.சு.மு வேட்பாளர் தரனாத் பஸ்நாயக்க( வேட்பாளர் இல 15) அவர்களின் கட்சிக் காரியாலயமாக பயன்படுத்தப்பட்டு வருகின்றது.

தேர்தல் வன்முறைகளைக் கண்காணிப்பதற்கான நிலையம்(CMEV) இது தொடர்பில் கல்கமுவ பிரதேச செயலகத்தை தொடர்பு கொண்டபோது பெயர் குறிப்பிட விரும்பாத அதிகாரி ஒருவர் இச் சம்பவத்தை உறுதிப்படுத்தியதுடன் தற்பொழுது அக் கட்டிடம் கல்கமுவ கிராமிய அபிவிருத்தி சங்கத்தினால் நிர்வகிக்கப்பட்டு வருவதாக குறிப்பிட்டார்.

நுவரெலியா வலயக் கல்வி காரியாலயத்திற்கு சொந்தமான கட்டிடமொன்று கால்நடை அபிவிருத்தி அமைச்சரும் ஐ.ம.சு.மு வேட்பாளருமான சி.பி. ரத்னாயக்க( வேட்பாளர் இல 2) வின் பிரச்சார நடவடிக்கைக்காக பயன்படுத்தப்பட்டு வருகிறது.

தேர்தல் வன்முறைகளைக் கண்காணிப்பதற்கான நிலையம் இச்சம்பவம் தொடர்பில் நுவரெலியா வலயக்கல்விக் காரியாலயத்தை தொடர்பு கொண்ட போது பெயர் குறிப்பிட விரும்பாத அதிகாரி ஒருவர் பழைய கட்டிடத்தில் அமைச்சின் உப காரியாலயம் ஒன்று நிர்வகிக்கப்பட்டு வருவதாக தெரிவித்தார்.

தேர்தல் வன்முறைகளைக் கண்காணிப்பதற்கான நிலையம்(CMEV) சம்பவம் தொடர்பில் சி.பி ரத்னாயக்கவை தொடர்பு கொண்ட போது இக்குற்றச்சாட்டுக்களை மறுத்துரைத்தார்.

தேர்தல் வன்முறைகளைக் கண்காணிப்பதற்கான நிலையத்திற்கு(CMEV) சம்பரகமுவ மாகாண சபையினால் அமுல்படுத்தப்படும் பாதை நிர்மாண செயற்திட்டம் ஒன்றிற்குரிய கெப் வண்டியொன்று (WP JL 5264) பிரச்சார நடவடிக்கைகளுக்காக பயன்படுத்தப்படுவதாக அறிக்கைகள் கிடைக்கப்பெற்றன. குறிப்பிட்ட வண்டி ஐ.ம.சு.மு வேட்பாளரான கனக ஹேரத்( வேட்பாளர் இல 4) அவர்களின் பிரச்சார நடவடிக்கைகளுக்காக பயன்படுத்தப்பட்டுள்ளது.

சப்ரகமுவ மாகாண சபையின் பிரதான செயலாளர் காரியாலயத்தை தொடர்பு கொண்ட பொழுது அக் காரியாலயத்தை சேர்ந்த அதிகாரி ஒருவர் குறிப்பிட்ட வண்டி சர்வதேச அபிவிருத்திக்கான ஜப்பான் வங்கி(JBIC) யினால் நேரடியாக செயற்திட்ட காரியாலயத்திற்கு வழங்கப்பட்டதாகவும் அவ்வண்டி தொடர்பான விபரங்கள் தம்மிடம் இல்லையென்றும் குறிப்பிட்ட சம்பவம் தொடர்பில் தமக்கு அறியக் கிடைக்கவில்லை எனவும் தெரிவித்தார்.

குறிப்பிட்ட சம்பவம் தொடர்பாக கனக ஹேரத் அவர்களை மார்ச் 18 ஆம் திகதி தொடர்பு கொண்ட போது குற்றச்சாட்டுக்களை திட்டவட்டமாக மறுத்துரைத்தார்.

தேர்தல் வன்முறைகளைக் கண்காணிப்பதற்கான நிலையத்தின் களக் கண்காணிப்பாளர் அறிக்கையின் படி மகவெலி அதிகாரச் சபைக்கு சொந்தமான மிட்சுபிசி கெப் வண்டியொன்று (54 – 2425) விவசாய அபிவிருத்தி மற்றும் விவசாய சேவைகள் அமைச்சரும் ஐ.ம.சு.மு வேட்பாளருமான மைத்திரிபால சிரிசேனவின் (வேட்பாளர் இல 07) பதாகையொன்றை செவனபிட்டியவிலிருந்து வெளிக்கந்தைக்கு கொண்டு செல்வதற்காக மார்ச் 18 ஆம் திகதி பயன்படுத்தப்பட்டுள்ளது.

தனது பெயர் குறிப்பிட விரும்பாத பொலன்னறுவை மகாவெளி அதிகார சபையின் வதிவிட செயற்திட்ட அதிகாரி குறிப்பிட்ட வாகனம் அதிகாரச் சபைக்கு சொந்தமானதெனவும் குறிப்பிட்ட சம்பவம் தொடர்பாக தனக்கு தகவல் கிடைக்க வில்லையெனவும் தெரிவித்தார்.

**அதிகரித்துச் செல்லும் உட் கட்சி மோதல்கள்:** தேர்தல் நெருங்கும் வேளையில் அவதானிக்க கூடிய இன்னுமொரு விடயம் உட் கட்சி மோதல்களுக்கு வழி வகுக்கும் விருப்பு வாக்கிற்கான போட்டியாகும். ஐ.ம.சு.முன்னணிக்கெதிராக கிடைக்கப் பெற்றுள்ள 91 முறைப்பாடுகளுள் 23(25%) முறைப்பாடுகள் அக் கட்சி ஆதரவாளர்களினால் மேற் கொள்ளப்பட்டுள்ளன. உட் கட்சி மோதல் சம்பந்தமான 05 சம்பவங்கள் தென் மாகணத்திலிருந்து கிடைக்கப் பெற்றுள்ளன.சப்ரகமுவ மாகாணத்தில் கிடைக்கப் பெற்றுள்ள 12 பாரிய வன்முறைச் சம்பவங்களுள் 05 சம்பவங்களில் துப்பாக்கி பிரயோகப்படுத்தப்பட்டுள்ளது.தேர்தல் வன்முறைகளை கண்காணிப்பதற்கான நிலையம்(CMEV) கிழக்கு மாகணத்திலிருந்து இத்தகைய 03 சம்பவங்களை பதிவு செய்துள்ளது.வட மத்திய மற்றும் மேல் மாகணங்களிலிருந்து துப்பாக்கி பிரயோகம் தொடர்பில் தலா இரு சம்பவங்கள் பதிவு செய்யப்பட்டுள்ள அதே வேளை வட மேல் மற்றும் மத்திய மாகணங்களிலிருந்து 01 சம்பவம் வீதம் கிடைக்கப் பெற்றுள்ளன.

தேர்தல் வன்முறைகளைக் கண்காணிப்பதற்கான நிலையத்திற்கு(CMEV) குருநாகலிலிருந்து அண்மையில் கிடைக்கப்பெற்ற துப்பாக்கி பயன்படுத்தப்பட்ட சம்பவமொன்று கீழே விபரிக்கப்பட்டுள்ளது.

17 மார்ச் இரவு 10.30 மணியளவில் வெள்ளை நிற கெண்டர் வண்டியொன்றில் வந்த ஐ.ம.சு.மு வேட்பாளர் ஆர்.டி. விமலதாச(வேட்பாளர் இல 6) இன் ஆதரவாளர் ஐ.தே.க நில்வலா விஜயசிங்க(வேட்பாளர் இல 11) வின் ஆதரவாளர் குழுவொன்றை தாக்கியுள்ளனர். நில்வலாவின் ரிதிகமவில் அமைந்துள்ள வீட்டில் நடைபெற்ற கூட்டம் முடிந்து இரவு உணவு அருந்திக்கொண்டிருந்த வேளையிலேயே தாக்குதல் நடைபெற்றுள்ளது. தாக்குதலின் காரணமாக காயமடைந்த 5 ஐ.தே.க ஆதவாளர்கள் குருநாகல் பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்கள்.

தேர்தல் வன்முறைகளைக் கண்காணிப்பதற்கான நிலையத்தின்(CMEV) களக் கண்காணிப்பாளர் வைத்தியசாலைக்கு சென்று தாக்குதலுக்குள்ளானவர்களிடமிருந்து வாக்கு மூலங்களை மார்ச் 18 ஆம் திகதி பெற்றுக்கொண்டுள்ளார். ஐ.தே.க ஆதரவாளர் ஒருவரான அனுர முனசிங்கவின் கூற்றுப்படி வன்முறையாளர்கள் மரத் தடிகளினால் தாக்கியதாவும் அங்கு கூடியிருந்த ஐ.தே.க ஆதரவாளர்கள் தாக்குதலை தடுக்க முற்பட்ட பொழுது வன்முறையாளர்கள் விண் நோக்கி வேட்டுக்களைத் தீர்த்துள்ளனர். அறிக்கையிடப்பட்ட படி சம்பவ இடத்தில் நின்ற வெளிநபரொருவரும் துப்பாக்கிச் சூட்டினால் உருவான கலவரச் சூழ்நிலை காரணமாக தலையில் சிறு காயங்களுக்கு உள்ளானார்.

தேர்தல் வன்முறைகளைக் கண்காணிப்பதற்கான நிலைய(CMEV) களக் கண்காணிப்பாளரின் கூற்றுப்படி ரிதிகம பொலிஸார் சம்பவத்தை உறுதிப்படுத்தியதுடன் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

தேர்தல் வன்முறைகளைக் கண்காணிப்பதற்கான நிலையம்(CMEV) அனைத்து அரசியல் கட்சிகளின் தலைவர்களையும் குறிப்பாக ஆளும் கூட்டணியிரை - அவர்களுக்கெதிராக கூடுதலான முறைப்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதென்ற வகையில்- இலங்கையில் ஜனநாயகத்திற்கும் தேர்தல் நடைமுறைகளின் நேர்மைத்தன்மைக்கு அச்சுறுத்தலாக அமையும் வன்முறைகளை தமது கட்சி வேட்பாளர்கள் மற்றும் ஆதரவாளர்கள் மேற்கொள்வதை தடுப்பதற்கு உடனடியானதும் செயல் விளைவு மிக்கதுமான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு அழைப்பு விடுக்கிறது.

தேர்தல் வன்முறைக் கண்காணிப்பதற்கான நிலையத்தின்(CMEV) பல்வேறு தேர்தல்களின் போதான அனுபவமானது பிரச்சார காலப்பிரிவின் பொழுது மேற்கொள்ளப்படும் வன்முறைகள் நேரடியாக வாக்களிப்பில், பிரச்சார காலப்பிரிவில் சட்டத்திற்கு அகப்படாத வகையில்

வன்முறைகளை மேற்கொண்டவர்களுக்கு சாதகமாக வன்முறையற்ற தேர்தல் தினமொன்றை உருவாக்குவதனூடாக, தாக்கத்தை ஏற்படுத்துகிறது. எனவே தேர்தல் நடைமுறைகளின் நேர்மைத்தன்மையை பாதுகாப்பதற்கு பிரச்சார காலப்பிரிவில் மேற்கொள்ளப்படும் வன்முறைகள் தடுக்கப்படுதலும் வன்முறையாளர்கள் சட்டத்தின் முன் கொண்டு வரப்படுதலும் மிக அவசியமானதாகும்.

இச் சூழலில் நாம் தேர்தல் வன்முறைகளைக் கண்காணிப்பதற்கான நிலையத்தினால்(CMEV) தொடராக வழியுறுத்தப்பட்டுவரும் விடயமான 17 வது சீர் திருத்தச் சட்டத்தின் முழுமையானதும் அவசரமானதுமான அமுலாக்கத்தின் அவசியத்தை மீள அடையாளப்படுத்துகின்றோம். தேர்தல் நடைமுறைகளின் நேர்மைத்தன்மையை பாதுகாப்பதற்கு 17 வது சீர் திருத்தச் சட்டத்தின் மூலம் வழங்கப்பட்டுள்ள பொலிஸ், அரச சேவை மற்றும் தேர்தல்களுக்கான சுயாதீன ஆணைக்குழுக்கள் தாபிக்கப்படல் முற்றிலும் அவசியமானதாகும்.

தேர்தல் வன்முறைகளைக் கண்காணிப்பதற்கான நிலையம்(CMEV) பாராளுமன்றத் தேர்தலை கண்காணிப்பதற்கான நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளது. 180 களக் கண்காணிப்பாளர்களை இதுவரையில் கண்காணிப்பில் ஈடுபடுத்தியுள்ளதுடன் 4,500 வாக்குச்சாவடி கண்காணிப்பாளர்களையும் 50 நடமாடும் கண்காணிப்புக் குழுக்களையும் தேர்தல் தினத்தன்று கண்காணிப்பில் ஈடுபடுத்தவுள்ளது.

மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தால் ( CPA) 1997 ம் ஆண்டு தேர்தல் வன்முறைகளை கண்காணிக்கும் நிலையம் (CMEV) ஆரம்பிக்கப்பட்டது. சுதந்திரமாகவும் பக்கசார்பற்ற வகையிலும் தேர்தல் வன்முறைகளை கண்காணிக்க சுதந்திர ஊடக இயக்கமும் (FMM) இணைந்துகொண்டது. தற்போது தேர்தல் வன்முறைகளை கண்காணிக்கும் நிலையம் (CMEV), மாற்றுக் கொள்கைக்கான நிலையம் (CMEV) சுதந்திர ஊடக இயக்கம் (FMM), மற்றும் INFORM மனித உரிமைகள் ஆவணப்படுத்தும் நிலையம் ஆகியவற்றின் பங்களிப்புடன் இயங்கிவருகின்றது.

| | | |
|---|---|---|
| கலாநிதி பா.சரவணமுத்து<br>இணை-அழைப்பாளர் | சுனில் ஜயசேகர<br>இணை-அழைப்பாளர் | உதய கலுபதிரண<br>இணை-அழைப்பாளர் |